# ECHO OF HIS CALL

# அழைப்பின் எதிரொலி

Tamil

₹ 10/-

ECHO OF HIS CALL 1969-2019 GOLDEN JUBILEE

REACHING NATIONS

India's National Spiritual Newspaper

Published monthly in ENGLISH, TAMIL, MALAYALAM, TELUGU, HINDI, KANNADA, MARATHI, BENGALI, GUJARATI, ODIYA, ASSAMESE, PUNJABI, NEPALI, URDU, SINHALA & AFRIKAN

Editor : S. SAM SELVA RAJ | 16 Languages | Senior Associate Editor: Dr. SERENA BEVIN

Vol. XXX YEAR OF OUR LORD JESUS CHRIST, 2025 JULY No. 07


## பரிசுத்த வேதாகமம்



இப்பகுதியை மனப்பாடம் செய்யவும்

### சங்கீதம் 8:1- 9

1. எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது! உம்முடைய மகத்துவத்தை வானங்களுக்கு மேலாக வைத்தீர்.
2. பகைஞனையும் பழிகாரனையும் அடக்கிப்போட, தேவரீர் உம்முடைய சத்துருக்களினிமித்தம் குழந்தைகள் பாலகர் வாயினால் பெலன் உண்டு பண்ணினீர்.
3. உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது,
4. மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்.
5. நீர் அவனைத் தேவதூதரிலும் சற்று சிறியவனாக்கினீர்; மகிமையினாலும், கனத்தினாலும் அவனை முடி சூட்டினீர்.
6. உம்முடைய கரத்தின் கிரியைகளின் மேல் நீர் அவனுக்கு ஆளுகை தந்து, சகலத்தையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.
7. ஆடுமாடுகளெல்லாவற்றையும், காட்டு மிருகங்களையும்,
8. ஆகாயத்துப் பறவைகளையும், சமுத்திரத்து மச்சங்களையும், கடல்களில் சஞ்சரிக்கிறவைகளையும் அவனுடைய பாதங்களுக்குக் கீழ்ப்படுத்தினீர்.
9. எங்கள் ஆண்டவராகிய கர்த்தாவே, உம்முடைய நாமம் பூமியெங்கும் எவ்வளவு மேன்மையுள்ளதாயிருக்கிறது.

## நாம் கனிகொடுக்கும்படித் தெரிந்துகொள்ளப்பட்டோம்!



~ சகோதரி ஏஞ்சல்



நம்முடைய கர்த்தரும், இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில் உங்களுக்கு வாழ்த்துக்கள்!

2025ஆம் ஆண்டின் இரண்டாம் பாதியில் நம்மை அடியெடுத்து வைக்க அனுமதித்ததற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்; துதிக்கிறேன். அவருடைய உண்மை மகத்தானது!

இந்த ஆண்டின் இரண்டாம் பாதியில் கடந்து வந்துள்ள நம்மில் எத்தனை பேர் இன்னும் நமது புத்தாண்டுத் தீர்மானங்களைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இன்று நாம் எவ்வாறு இருக்கிறோம் என்பது நேற்று நாம் எடுத்த முடிவுகள் மற்றும் தெரிவுகளின் விளைவாகும். அதேபோல், நாளை நாம் எங்கே இருப்போம் என்பதும் இன்று நாம் எடுக்கும் தேர்வுகளைப் பொறுத்தது. நமது தேர்வுகள் ஒவ்வொன்றும் விளைவுகளை ஏற்படுத்துகிறது.

நாள்தோறும் நமது உணவு, உடை, வேலை, செல்ல வேண்டிய இடங்கள், சிந்திக்க வேண்டிய நபர்கள் போன்ற பல எண்ணற்ற முடிவுகளை எதிர்கொள்கிறோம். நாம் அடிக்கடி நம்மை அறியாமலேயே இதுபோன்ற நூற்றுக்கணக்கான தெரிவுகளைச் செய்கிறோம்.

இந்த தெரிந்தெடுப்புகள் எல்லாவற்றிற்கும் மத்தியில், "நான் உன்னைத் தெரிந்து கொண்டேன்!" என்னும் இயேசு கிறிஸ்துவின் குரலைக் கேளுங்கள்.

தொடர்ச்சி 3-ம் பக்கம்.....




அழைப்பின் எதிரொலி!

கிறிஸ்தவ யூடியூப் சானல்!

போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களுடன்

நேரடியாக ஜெபிக்க ஓர் நல்வாய்ப்பு!!

5 நிமிடத்தில் தேவ செய்தியும், ஜெபமும்!!

தமிழ், ஆங்கிலம், இந்தி & தெலுங்கு

தினந்தோறும் - காலை 2.00 மணியில் இருந்து

தமிழ் ஞாயிறு ஆராதனை - காலை 8.30 மணிக்கு

* பதிவு செய்யுங்கள் - பிறருக்கும் பகிருங்கள் *

ECHO OF HIS CALL - (1969-2019 GOLDEN JUBILEE YEAR)



# உங்கள் அன்பு சகோதரனிடமிருந்து...



**கர்த்தர் உன் நம்பிக்கையாயிருந்து, உன் கால் சிக்கிக்கொள்ளாதபடி காப்பார்.**
**- நீதிமொழிகள் 3:26**

**OUR MISSION POLICY**

We should expound and teach the contemporary generation the undiluted teachings of the ancient and early Apostles. It is the need of the hour.


**HON. EDITOR-IN-CHIEF**
Rev. Angeline S. Kumari, M.A., M.Sc., M.Ed.

**Ex MANAGING EDITOR**
Pastor Alex Samson Sam, B.Th., M.Div.

**GENERAL MANAGER**
Bro. N. Prakasam, M.A., M.Sc.(C&P), PGDHRM., MBA.

**ADMINISTRATION**
Sis. Jesy Veena Sam
Adv. K. Puratchivendan, M.Com., C.A., B.L.
Dr. P.E.R. Premchand, M.Sc., M.A., M.Ed., Ph.D.
Dr. C.G.S. Baburao, B.Tech., M.Tech. (DM), Ph.D.
Dr. Rabinder Boaz, M.S. (CMC)

**EDITORIAL BOARD**
Dr. Serena Bevin, M.A., M.Phil., B.Ed.
Sis. Sajini Cherian
Rev. Dr. K.R. Rajasekaran
Rev. Dr. William Robert, Ph.D., DD, D.Lit.



**EDITOR, PUBLISHER & PRINTER**
Pastor S. SAM SELVA RAJ
Echo of His Call Printers
10, Mohammed Abdullah 2nd Street,
Chepauk, Chennai- 600 005, India.
Phone : (+ 91- 44) 2852 8282, 2852 9293, 2854 7766
Cell : (+91) 98410 71852, 98412 71858 95661 31858

**E.MAIL**
sam@echoofhiscall.org
biblecor@yahoo.co.in

**WEBSITES**
www.echoofhiscall.org
www.stpaulsmatriculation.org

**YOUTUBE CHANNEL**
Echo of His Call


கர்த்தருக்குள் அன்புள்ள நண்பர்களே,

நமது கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலையேறப் பெற்ற நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்!

கர்த்தரின் பெரிதான கிருபையால் ஒரு விசேஷித்த ஜூன் மாதத்தைக் கடந்து வந்துள்ளோம். நமது ஊழியங்களின் அனைத்து செயல்பாடுகளையும் கர்த்தர் சிறப்பாக நடத்தினார். நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை, அச்சகம், தலைமைச் சபை, கிளைச் சபைகள், **வேதாகம அஞ்சல் வழிக் கல்வி, இறையியல் அஞ்சல் வழிக் கல்வி, செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி, நெகேமியா வேதாகமக் கல்லூரிகள், வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளி ஊழியங்கள், வாலிபர் ஊழியங்கள், ஆண்கள் மற்றும் பெண்கள் ஊழியங்கள், மிஷினரி ஊழியங்கள், Echo of His Call யூடியூப் ஊழியங்கள் மற்றும் நிர்வாகக் குழுக்கள்** ஆகிய துறைகளிலும் நடைபெற்ற செயல்பாடுகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் அனைத்திலும் தேவனுடைய கிருபை காணப்பட்டது.

நூற்றுக்கணக்கான அர்ப்பணிப்புள்ள நமது ஊழியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் உண்மையாக உழைத்துள்ளனர். நமது ஊழியத்தின் முக்கியத் தலைவர்கள் தங்கள் களப்பணித் தகவல்களைப் பெற்றுக்கொண்டு மாதந்தோறும் ஜெபத்திற்கும்,



**நமது ஊழியத்தின் முக்கியத் தலைவர்கள் கூடியுள்ள மாதந்திர ஜெபக்கூடுகை**

திட்டமிடுதலுக்கும் கூடி வருகின்றனர். தேவனுடைய அபரிமிதக் கிருபைக்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாயிருக்கின்றோம்.

கடந்த மாதம் 7–ம் தேதியன்று **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு வாலிபர் முகாமில் 200–க்கும் மேற்பட்ட இளம் ஆண்கள் மற்றும் பெண்கள் கலந்து கொண்டு ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்; பங்கு பெற்ற பலரும் தேவ அபிஷேகத்தையும், தங்களது எதிர்காலத்திற்கான அழைப்பையும், தரிசனத்தையும் பெற்றுத் திரும்பிச் சென்றனர். அவர்களது வாழ்க்கையில் ஓர் உண்மையான பரிசுத்த ஆவிக்குரிய மறுரூபத்தையும், குறிப்பாக அவர்களது இல்லங்களில் பெற்றோரின் மத்தியில் ஓர் சாதகமான மாற்றத்தையும் காண முடிந்தது. தேவ ஆவியானவரின் இந்த அசைவாடுதலுக்காக தேவனுக்கு மகிமையுண்டாவதாக!

Our Ministries: ECHO OF HIS CALL Monthly Magazines (16 languages) ☼ BIBLECOR - Postal Courses (3 languages) ☼ YouTube Ministry ☼ Online Courses ☼ Theological Correspondence Courses (2 languages) ☼ Church Planting ☼ Nehemiah Bible Colleges ☼ Gospel Printing Press ☼ Great Commission Partners ☼ St. Paul's Matriculation School ☼ Crusades ☼ Community Development





சிறப்பு வாலிபர் முகாம்

மேலும், கடந்த மாதம் ஜூலை 20 முதல் 22–ம் தேதி வரை நமது தலைமைச் சபை மற்றும் சந்தோஷபுரம் சபையில் நடைபெற்ற குடும்ப ஆசீர்வாத முகாமுக்காக தேவனைத் துதிக்கிறோம். கர்த்தர் கிருபையாக அருளிய ஆவிக்குரிய அறுவடையை எங்களால் காண முடிந்தது. உங்களது ஊக்கமான ஜெபங்களுக்காக மிக்க நன்றி!

பன்முகத் தன்மையுடைய நமது ஊழியங்களுக்காக உங்களது ஜெபங்களைத் தொடர்ந்து ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். இருளின் அதிகாரங்களை எதிர்த்து ஆவிக்குரிய போராட்டக் களத்தின் முன்னணியில் நாங்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சந்திக்க உங்களது மேலான ஜெபங்களும், ஆதரவும் எங்களுக்கு மிகவும் பலனுள்ளவை.

தேவன்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக!

**அழைப்பின் எதிரொலி ஊழியக் குழுவினர்.**

E.mail : sam@echoofhiscall.org

## அறிவிப்பு

*(+91) 98410 71858 மற்றும் (+91) 98412 71858 ஆகிய போதகரின் பிரதான இரு செல்போன் எண்களையும் தங்கள் செல்போன்களில் பதிவு செய்து கொள்ளுங்கள்.*

– **ஆசிரியர்**

... 1–ம் பக்கத் தொடர்ச்சி

**நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்**... யோவான் 15:16.

இந்த வசனம் சுயதீர்மானம் பற்றிய நமது நவீன கால கருத்துக்குச் சவாலாக உள்ளது. நாம் பெரும்பாலும் நமது தெரிவுகளில், குறிப்பாக நமது ஆவிக்குரிய வாழ்க்கைப் பயணத்தைக் குறித்து பெருமை கொள்கிறோம். ஆனால், இயேசு கிறிஸ்து அந்தக் கண்ணோட்டத்தை தலைகீழாக மாற்றுகிறார். ஆரம்பத்திலிருந்தே தேவன் நம்மை அவரிடம் இழுத்துக் கொள்கிறார்.

பண்டைய யூத மரபில், சீஷர்கள் தான் தங்கள் ரபீக்களைத் தேடிச் சென்றனர். ஆனால், இயேசு கிறிஸ்து இந்த முன்னுதாரணத்தை மாற்றியமைத்து – அவர்தான் நம்மைத் தெரிந்து கொள்ளுகிறவராயிருக்கிறார்.

### 1. சூழலைப் புரிந்து கொள்வது!

இந்த வசனத்தின் ஆழத்தைப் புரிந்து கொள்ள, இயேசு கிறிஸ்து இதைப் பேசிய சூழலை, அதாவது, அந்த காலத்தின் வரலாற்றுப் பின்னணியையும், அவரது சீஷர்களின் மனநிலையையும் கருத்தில் கொள்வது அவசியம்.

### 2. வரலாற்று சூழல்!

யோவான் 15:16–ஐ குறித்து இயேசு கிறிஸ்து தனது இறுதி பஸ்கா உணவின்போது பேசினார். அது யூதர்களுக்கு ஒரு தேசமாக அவர்களின் அடையாளத்தையும் விடுதலையையும் நினைவுகூரும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தருணம் ஆகும். இந்த புனிதமான கூடுகையில் இயேசு கிறிஸ்து, தேவனுடைய மக்களாக இருப்பதன் அர்த்தத்தை மறுவரையறை செய்கிறார்.

கடனாகப் பெறப்பட்ட மேல் வீட்டறையில், பெரும்பாலும் எருசலேமில், தனது பன்னிரு சீஷர்களுடன் பந்தியிருந்து, இங்குதான் அவர் கர்த்தருடைய இராப்போஜனத்தை துவக்கினார். இதே சூழலில், அவர் தனது இறுதி போதனைகளையும் அவர்களுக்கு

## மிக அவசர செய்தி!




நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகளை தபால் மூலம் அனுப்புவதில் சில தவிர்க்க முடியாத தடைகள் வெகு சீக்கிரத்தில் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே, நமது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்கள் பெயர்களையும், முகவரிகளையும், இ.மெயில் (மின்னஞ்சல்) முகவரிகளையும், வாட்ஸ்அப் எண்களையும் கடிதம் மூலமோ, இ.மெயில்(மின்னஞ்சல்) மூலமோ, தொலைபேசி மூலமோ, வாட்ஸ்அப் மூலமோ குறுஞ்செய்தி மூலமோ எங்களுக்கு உடனே அனுப்புங்கள்.

தொடர்ந்து உங்களுக்கு ஊழியம் செய்ய எங்களுக்கு உதவுங்கள்!

**எங்கள் முகவரி:**

**ECHO OF HIS CALL,**
10, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005, India
Cell: (+91) 98412 71858 / 98410 71858 E.mail: sam@echoofhiscall.org

## ஜெப வேண்டுகோள்!



ஆகஸ்ட் 8 முதல் 10ம் தேதி வரை நடைபெற உள்ள சிறப்புக் குடும்ப முகாம் கூட்டங்களின் ஆசீர்வாதங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

வழங்குகிறார். அது அவரது பிரியாவிடை சொற்பொழிவு ஆகும். இவை சாதாரணமான கருத்துக்கள் அல்ல; அவை அவர் சென்ற பிறகு சீஷர்களைத் தயார்படுத்தவும், நிலைநிறுத்தவும் நோக்கமாகக் கொண்ட முக்கியமான சத்தியங்கள் ஆகும்.

இது இயேசு கிறிஸ்துவின் இறுதி நேரத்தில் அவர் கூறிய வார்த்தைகளின் அவசரத்தையும், முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகிறது. அவை அன்பிலும், தெய்வீக தொலைநோக்குப் பார்வையிலும் பேசப்பட்ட ஆழமான நோக்கமுள்ள வார்த்தைகள் ஆகும்.

### 3. சீஷர்களின் மனநிலை!

சீஷர்களின் மனநிலையையும், உணர்ச்சி நிலையையும் கற்பனை செய்து பாருங்கள். அவர்கள் மூன்று ஆண்டு களுக்கும் மேலாக இயேசு கிறிஸ்துவுடன் இருந்தனர். அவருடன் நடந்து, உணவருந்தி, ஊழியம் செய்து, அவரிடமிருந்து கற்றுக் கொள்வதில் தங்களது இரவு, பகல்களையும் கழித்தனர். மிக முக்கியமாக, அவர்கள் தங்களுக்குச் சொந்தமான அனைத்தையும் விட்டுவிட்டு, விருப்பத்துடனும் முழு மனதுடனும் பின்பற்றினர்.

இப்போது, திடீரென்று, அவர்கள் தங்கள் எஜமானரிடமிருந்து வேதனையான வார்த்தைகளைக் கேட்கிறார்கள்: அவர் மரிக்கப் போகிறார். அவர்களில் ஒருவர் அவரைக் காட்டிக் கொடுப்பார், மற்றொருவர் அவரை மறுதலிப்பார். அவர்கள் உணர்ந்தி ருக்க வேண்டிய கொந்தளிப்பை உங்களால் கற்பனை செய்ய முடியுமா? அவர்களின் முழு உலகமும் அவர்களின் கால்களுக்குக் கீழே நடுங்கிக் கொண்டிருந்தது.

இதைப் படிக்கும் உங்களில் சிலர் இதே போன்ற இடத்தில் இருக்கலாம்; உங்கள் உலகம், விசுவாசம் மற்றும் உங்கள் நம்பிக்கை அவிழ்ந்து போவது போல் தெரிகி றதா? நான் எதைப் பிடித்துக் கொள்ள முடியும்? என்று நீங்கள் கேட்கலாம். இதுதான் உங்கள் நிலை என்றால், இன்று கர்த்தர் உங்களுக்காக ஒரு சிறப்பு செய்தியை வைத்திருக்கிறார்.

முக்கியமான போதனைகள் பெரும் பாலும் மிகவும் எதிர்பாராத – குறிப்பாக நெருக்கடியான தருணங்களில்தான் வெளிப்படுகின்றன. கனி கொடுக்க வேண்டும் என்ற போதனையை இத்தகைய தருணத்தில்தான் இயேசு கிறிஸ்து தனது சீஷர்களிடம் பேசினார். ஆனால் இதுபோன்ற சவாலான நேரத்தில் ஒருவர் எவ்வாறு கனி கொடுக்க முடியும்?

இந்தக் கட்டுரை இரண்டு பகுதி களாக வழங்கப்படும். இந்த மாதம், யோவான் 15:16–ன் முதல் பகுதியைப் பற்றி சிந்திப்போம். அதாவது, நம்மைத் தெரிந்து கொள்ளுவதில் தேவனுடைய பங்கு. அடுத்த மாதம், நிலைத் திருக்கும் கனியைக் குறித்த தெரிந்தெடுப் பின் நோக்கத்தினை ஆராய்வோம்.

## I. தேவனுடைய தெரிந்து கொள்ளுதல்:

### ஆண்டவருடைய தெரிவுகளின் நான்கு அம்சங்கள்!

### (அ) உறவின் தொடக்கம் கர்த்தராகிய தேவனே!

கர்த்தராகிய தேவனே உறவைத் தொடங்குபவர் என்பதை வேதாகமம் தொடர்ந்து வெளிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்து, "ஆனால் நான் உங்களைத் தெரிந்துகொண்டேன்" என்றார். "தெரிந்து கொண்டேன்" என்பதற்கு இங்கு பயன் படுத்தப்படும் கிரேக்க வார்த்தை எக்லெகோ மாய், அதாவது தனக்காக தெரிந்து கொள்வது அல்லது பொறுக்கியெடுப்பது என்பதாகும். இதே உண்மை எபேசியர் 1:4–லும் எதிரொலிக்கிறது. **'உலகத்தோற்றத் திற்கு முன்பே அவர் நம்மை அவருக்குள் தெரிந்துகொண்டார்.'**

நாம் தேவனைக் கண்டுபிடித்தோம் என்று நம்பும் நமது எண்ணத்திற்கு இது அறைகூவலாக உள்ளது. உண்மையில், அவர்தான் நம்மைத் தேடி வருகிறார். தொலைந்து போன ஆடுகளின் உவமையைக் கவனியுங்கள்: மேய்ப்பன் தொலைந்து போன ஆட்டைப் பின்தொடர்ந்து போகிறான். அதேபோல், நம்முடைய அன்பான நல்ல மேய்ப்பன் உங்களையும் என்னையும் பிதாவிடம் திரும்பக் கொண்டு வருவதற்காக நம்மைத் தேடி வருகிறார்.

இந்த தெய்வீகத் தெரிவு தன் னிச்சையானதோ, கண்மூடித்தனமானதோ அல்ல – இது அவரது விருப்பமும், மிகவும் தனிப்பட்டதுமாகும். உலகில் உள்ள எல்லா ஜனங்களின் மத்தியில் இருந்து, தேவன் உங்களைத் தெரிந்தெடுத்தார். என்னே ஒரு நம்பமுடியாத பாக்கியம்!

இந்த அடிப்படை உண்மையை நினைவில் கொள்வோம். நாம் உயிர் வாழ்வது தேவ சித்தத்தின்படியானது. நீங்க ளும், நானும் நோக்கத்துடன் படைக்கப்பட் டோம். நாம் சிருஷ்டிப்பின் ஒழுங்கற்ற படைப்புகளல்ல – நாம் தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள். வடிவமைத்து உருவாக்கப்பட்டவர்கள்.

### (ஆ) தகுதியற்றவர்க்கு அளிக்கப்படும் கிருபை!

தேவனுடைய தெரிந்து கொள்ளு தல், நமது தகுதிகள் அல்லது சாதனைகளை அடிப்படையாகக் கொண்டது அல்ல. **யாக்கோபும், ஏசாவும் நன்மை, தீமை இன்னதென்று அறியுமுன்பே தேவன் அவர்களைத் தெரிந்து கொண்டார்.** (ரோமர் 9:11–12). தேவனுடைய கிருபை நாம் செய்த கிரியைகளால் அல்லது செய்யாமல் விட்ட கிரியைகளால் சம்பாதிக்கப்படாமல், இலவச மாக வழங்கப்படுகிறது என்பதை இது தெளிவாகக் காட்டுகிறது. தகுதியற்றவர் களுக்கு ஈவு; இதுதான் தேவனுடைய கிருபையின் இயல்பு. இந்த சத்தியம் கிரியை சார்ந்த மதத்திலிருந்து நம்மை விடுவிக்கிறது.

எனவே, உங்களில் யாராவது வேதாகமத்தை படிக்காததால் அல்லது தொடர்ந்து ஜெபிக்காததால் சோர்வடைந் தால், நீங்கள் ஒரு தொலைந்து போனவர்

தொடர்ச்சி 6–ம் பக்கம்.....


நெகேமியா வேதாகமக் கல்லூரிகள்

சேப்பாக்கம் & சந்தோஷபுரம், வேளச்சேரி – சென்னை

கல்வித்தகுதி : 10–ம் வகுப்பு மற்றும் அதற்கு மேல்

Diploma in Theology

போதனா மொழி : தமிழ் (பகுதி நேரம்) மாலை நேர வகுப்பு

போதனா மொழி : இந்தி (முழு நேரம் (Residential)) (தங்கிப் படிப்பவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கப்படும்.)

உடனே அணுகவும் !

உலகத்தின் தலைசிறந்த கிறிஸ்தவ தலைவர்கள் மற்றும் போதகர்களின் நன்மதிப்பைப் பெற்ற 55 வருட அனுபவ ஸ்தாபனம்.

தொடர்புக்கு : தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி,

10, முகமது அப்துல்லா 2–வது தெரு, பெல்ஸ் ரோடு, சேப்பாக்கம், சென்னை – 600 005.

தொலைபேசி: (+91–44) 2852 8282, கைபேசி: (+91) 98410 71852, 95661 31858

மின்னஞ்சல் : sam@echoofhiscall.org /இணையதளம் : www.echoofhiscall.org

GREAT COMMISSION PARTNERS ECHO OF HIS CALL MINISTRIES SINCE 1969

# பிரதானக் கட்டளைப் பங்காளர்

## GREAT COMMISSION PARTNERS - PRAISE & PRAYER POINTS

**பகிர்தல்** (Share) (கலாத்தியர் 6:2), **உதவி செய்தல்** (Support) (ரோமர் 12:13) மற்றும் **துரிதப்படுத்துதல்** (Speed up) (II தீமோத்தேயு 1:6)

**துதி மற்றும் ஜெப குறிப்புகள் - 2025 ஜூலை 19 முதல் ஆகஸ்ட் 18 வரை**

(இப்பகுதியைப் பிரித்தெடுத்து, மடித்து, உங்கள் வேதாகமத்தினுள் வைத்து தொடர்ந்து ஜெபியுங்கள்)

## தேவனுக்கு நன்றி செலுத்துங்கள்

ஜூலை 19 ⇨ 2025–2026 கல்வி ஆண்டுக்கான நமது **நெகேமியா வேதாகமக்கல்லூரி** மற்றும் **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி** மாணவர் சேர்க்கைகளை ஆசீர்வதித்து வருகிறதற்காக…

ஜூலை 20 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களை ஆசீர் வதித்து வருகிறதற்காக…

ஜூலை 21 ⇨ நமது அனைத்து சபை போதகர்கள் மற்றும் ஊழியர்களை ஆசீர்வதித்து வருகிறதற்காக…

ஜூலை 22 ⇨ நமது **சர்வதேச வாலிபர் மற்றும் சிறுவர்நல தரிசன ஊழியத்தை** ஆசீர்வதித்து வருகிறதற்காக…

ஜூலை 23 ⇨ நமது தலைமைச் சபைக்கு புது உத்வேகமுள்ள விசுவாசிகளை கொடுத்து ஆசீர்வதித்ததற்காக…

ஜூலை 24 ⇨ சந்திக்கப்படாத மக்களை சுவிசேஷம் சென்றடையச் செய்த கிருபைக்காக…

ஜூலை 25 ⇨ நமது மிஷனரி ஊழியர்களின் பெரிதான அர்ப்பணிப்பிற்காக…

ஜூலை 26 ⇨ நமது உலக நாடுகளைக் காத்து வருவதற்காக…

ஜூலை 27 ⇨ எழுப்புதலுக்குரிய புதிய விசுவாசிகளை ஆசீர்வதித்ததற்காக…

ஜூலை 28 ⇨ நமது மாநில ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அவர்களது சமூகத்தையும் கர்த்தர் ஆசீர்வதித்து வருவதற்காக …

ஜூலை 29 ⇨ நமது ஊழியங்களை ஜெபங்களினாலும், பொருளாதாரங்களினாலும் ஆதரிப்பவர்களை காத்து வருகிற கிருபைக்காக…

ஜூலை 30 ⇨ நமது ஜெபப்பங்காளர்கள், சந்தாதாரப் பங்காளர்கள், விசுவாசப் பங்காளர்கள், ஆயுள் பங்காளர்கள் மற்றும் பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் அனைவரையும், அவர்களது குடும்பத்தாரையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக..

ஜூலை 31 ⇨ நமது சுவிசேஷ அச்சகத்தின் தங்குதடையற்ற இயக்கத்திற்காகவும், அதன் திறமையான ஊழியர்களுக்காகவும்…

ஆகஸ்ட் 01 ⇨ நமது **செயின்ட் பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு**, புதிய அனுபவமிக்க ஆசிரியர்கள் கிடைத்ததற்காக…

ஆகஸ்ட் 02 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களையும், அவர்கள் குடும்பத்தையும் ஆசீர்வதித்து வருகிறதற்காக ……

ஆகஸ்ட் 03 ⇨ **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை ஊழியத்தினை 1969 முதல் ஆசீர்வதித்து வருகிறதற்காக….

## தேவனிடத்தில் ஜெபியுங்கள்

ஆகஸ்ட் 04 ⇨ சுவிசேஷம் சென்றடையாத உலக பகுதிகள் அனைத்திற்கும் சுவிசேஷத்தைக் கொண்டு சென்றிட நமக்கு வாய்ப்பளிக்க வேண்டி…

ஆகஸ்ட் 05 ⇨ அனைத்து சமயங்களின் ஒற்றுமைக்காக …

ஆகஸ்ட் 06 ⇨ உலகமெங்கிலும் சமாதானம் நிலவிட…

ஆகஸ்ட் 07 ⇨ பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக நடைபெறும் வன்முறைகள் நீங்க …

ஆகஸ்ட் 08 ⇨ நமது அனைத்து இணை ஆசிரியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களின் சுக ஜீவ பெலன் ஆரோக்கியத்துக்காகவும் …

ஆகஸ்ட் 09 ⇨ உலகிலுள்ள நாடுகள் அனைத்திற்குள்ளாக சமரசம் நிலவிட …

ஆகஸ்ட் 10 ⇨ இன்று 57–வது வருடத்திற்குள் அடியெடுத்து வைக்கும் நமது **அழைப்பின் எதிரொலி** ஊழியங்களுக்காக… …

ஆகஸ்ட் 11 ⇨ நமது தலைமைப் போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் நற்பணித் திட்டங்களுக்காக …

ஆகஸ்ட் 12 ⇨ சகலவிதமான நிலைகளிலும் மற்றும் திட்டமிடுதலிலும் உலக நாடுகள் ஒற்றுமையுடனும், முன்னேற்றத்துடனும் காணப்பட..

ஆகஸ்ட் 13 ⇨ உலகமனைத்திலும் உள்ள மக்களின் தேவைகள் சந்திக்கப்பட…

ஆகஸ்ட் 14 ⇨ உலகத்தில் நிலவி வரும் பொருளாதார மந்தநிலை முடிவுக்கு வரவேண்டி. …

ஆகஸ்ட் 15 ⇨ **வேனிற்கால விடுமுறை வேதாகமப் பள்ளிகள்** மூலமாக ஆண்டவரால் தொடப்பட்ட நூற்றுக் கணக்கான சிறுவர்கள் கர்த்தருக்குள் நிலைத்திருந்து சபைக்கு தொடர்ந்து வர வேண்டி ……

ஆகஸ்ட் 16 ⇨ கிறிஸ்தவ ஊழியர்கள் மற்றும் மிஷனரிகள் மீதான வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டி…

ஆகஸ்ட் 17 ⇨ குடும்பங்களில் சமாதான குலைச்சல்களை ஏற்படுத்தும் சாத்தானின் தந்திர நடவடிக்கைகளை நிர்மூலமாக்க வேண்டி.. …

ஆகஸ்ட் 18 ⇨ தேவ பிள்ளைகள்மேல் ஆவிக்குரிய மற்றும் உலகத்திற்குரிய ஆசீர்வாதங்கள் பொழியப்பட வேண்டி……

... 4-ம் பக்கத் தொடர்ச்சி

என்று நினைக்க வேண்டாம். நமது தகுதி நமது செயல்களால் வந்தது அல்ல. மாறாக, கர்த்தரின் கிருபையால் உண்டாகிறது.

இருப்பினும், ஜெபத்தில் ஈடுபடுவது, வார்த்தையைப் படிப்பது, அவருடன் நேரத்தைச் செலவிடுவது ஆகியவை அவருடனான நமது உறவில் வளரவும், அவரது சித்தத்தைப் புரிந்து கொள்ளவும், அவரைப் பிரியப்படுத்தும் வாழ்க்கையை வாழவும் நமக்கு உதவுகிறது. கர்த்தருடனான நமது பயணம் பெட்டிகளை சரிபார்ப்பது அல்லது செயல்பட்டு இலக்குகளை அடைவது பற்றியது அல்ல; அது விசுவாசத்தால் வாழ்வது பற்றியது – அது தகுதியற்றவர்களுக்கு அளிக்கப்படும் அவருடைய தயவாகும்.

அது நாம் யார் என்பதன் காரணமாக அல்ல – அவர் யார் என்பதன் காரணமாகவே இதனால்தான் இயேசு கிறிஸ்து உலகிற்கு வந்தார்; அவர் சிலுவையில் மரித்தார், அடக்கம் செய்யப்பட்டார். மூன்றாம் நாளில் மீண்டும் உயிர்த்தெழுந்தார். அவர் ஒரு அற்புதமான, சர்வ வல்லமை கொண்ட தேவன்.

### (இ) அன்பினால் தெரிந்து கொண்டார்!

மூன்றாவதாக, தேவனுடைய தெரிந்து கொள்ளுதலுக்குப்பின் அவரது அன்பு காணப்படுகிறது. **இஸ்ரவேலை அவர்கள் திரட்சியானவர்கள் என்பதற்காகத் தெரிந்து கொள்ளாமல், தேவன் அவர்களை நேசித்ததால் மட்டுமே தெரிந்து கொண்டார்** (உபாகமம் 7:7–8) என்பதை வெளிப்படுத்துகிறது. அவரது தெரிவு நமது தகுதியிலிருந்து அல்ல, அவருடைய அன்பான இயல்பிலிருந்து வருகிறது.

நமது கடந்த காலத்தைப் பொருட்படுத்தாமல் தேவன் நம்மை நேசிக்கிறார். தேவனுடைய அன்பிலிருந்து எதுவும் நம்மைப் பிரிக்க முடியாது. நீங்கள் அவருடைய அன்பை ஒருபோதும் அனுபவித்ததில்லை அல்லது அனுபவித்திருக்கிறீர்கள். ஆனால், அவருடைய சிலுவையைச் சுமக்கத் தயங்குகிறீர்கள் என்றால், இந்த செய்தி உங்களுக்கானது. தேவன் தம்மை நேசிக்கும் எவர் மூலமாகவும் செயல்பட முடியும்.

### (ஈ) தனிப்பட்ட தெரிந்து கொள்ளுதல்!

தேவனுடைய தெரிந்து கொள்ளுதல் மிகவும் தனிப்பட்டது. ... **உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன்.** ஏசாயா 43:1. இயேசு கிறிஸ்து தம்முடைய ஒவ்வொரு சீடரையும் தனிப்பட்ட முறையில் தெரிந்தெடுத்தார். அவர்களின் ஆளுமைகள், பலம் மற்றும் பலவீனங்களை முழுமையாக அறிந்தவர்.

தேவனுடைய அழைப்பின் இந்த தனிப்பட்ட அம்சம் நமக்கு ஆறுதலையும் முக்கியத்துவத்தையும் தருகிறது. நாம் கூட்டத்தோடு கூட்டமாக அல்ல நாங்கள் தனித்தனியாக தேவனால் தெரிந்தெடுக்கப்பட்டு, அறிந்து கொள்ளப்பட்டு, நேசிக்கப்படுகிறோம்.

**என்னோடு சேர்ந்து சொல்லுங்கள்:**

*“நான் தற்செயலாகத் தெரிந்தெடுக்கப்பட்டவன் அல்ல, நான் தேவனுடைய குறிப்பிட்ட தேர்வு. இரண்டாவது அல்ல, சிறந்தவன்”*

**நீங்களோ, உங்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவருடைய புண்ணியங்களை அறிவிக்கும்படிக்குத் தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்.** 1பேதுரு 2:9.

நாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட தலைமுறை என்பதை அவர் உறுதிப்படுத்துகிறார். நினைவில் கொள்ளுங்கள், நாம் வெறுமனேயல்ல விஷேசமாக தேவ நோக்கத்துடன் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள்.

நாம் சந்தையில் எப்படி காய்கறிகளைத் தேர்ந்தெடுக்கிறோம் என்பதைப் பற்றி சிந்தியுங்கள்: நாம் எல்லாவற்றையும் கண்ணை மூடிக்கொண்டு எடுத்துக் கொள்வதில்லை. எது சிறந்தது, மிகவும் விரும்பத்தக்கது என்பதை தெரிந்தெடுக்கிறோம். அதேபோல், தேவன் நம்மையும் அன்பாக – தமக்குச் சொந்தமானவர்களாகத் தெரிந்துக் கொண்டார். ராஜாதி ராஜா, பிரபஞ்சத்தின் தேவன், என்னைத் தம்முடைய தெரிந்து கொள்ளப்பட்ட தலைமுறையின் ஒரு பகுதியாகத் தெரிந்தெடுத்துள்ளார் என்பதை அறிவது எவ்வளவு நம்பமுடியாத பாக்கியம்! மகிழ்ச்சி!!


## II. தேவனுடைய தெரிவு முறை:

வேதாகமம் நெடுகவே தேவனுடைய தெரிவில் ஒரு நிலையான முறையைக் காண்கிறோம். அவர் பெரும்பாலும் தகுதியற்ற நபர்களைத் தெரிந்து கொள்கிறார். அவரது தெரிவுகள் கணிக்க முடியாதவை, நிபந்தனையற்றவை.

### (அ) ஆபிரகாம்!

ஆதியாகமம் 12:1–3–ல், **கல்தேயர்களின் ஊர் பட்டணத்தை விட்டு வெளியேறி, தன்னைப் பின்தொடர, தெரியாத இடத்திற்கு ஒரு விசுவாசப்பயணத்திற்கு கடவுள் ஆபிரகாமை அழைக்கிறார்.** ஆபிரகாம் 75 வயதுடையவராகவும், குழந்தை இல்லாதவராகவும் இருந்தார். ஆனால், தேவன் அவரைப் பல தேசங்களுக்குத் தந்தையாக்குவதாக வாக்குறுதி அளித்தார்.

அவர் குறைபாடற்றவரா? நிச்சயமாக இல்லை. அவர் தனது மனைவி சாராவைப் பற்றி பொய் சொன்னார். அபிமெலேக்கிடமிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ள அவளை தனது சகோதரி என்று அழைத்தார் (ஆதியாகமம்



**தனது மனைவி சாராவைப் பற்றி பொய் சொல்லும் ஆபிரகாம்**

தொடர்ச்சி 9-ம் பக்கம்.....

### வருமான வரி விலக்கு

இந்திய வருமான வரிச்சட்டம் பிரிவு 80G–கீழ் ஏழை, எளியோருக்கு மருத்துவம் மற்றும் சமுதாய முன்னேற்றத்திற்கான உதவி செய்வதற்காக “அழைப்பின் எதிரொலி” அறக்கட்டளைக்குத் தனிநபர் மற்றும் ஸ்தாபனங்கள் தரும் நன்கொடைகள் வருமான வரிச்சட்டப் பிரிவு 80G–யின் கீழ் வரிவிலக்குப் பெறத் தகுதியுடையவை. வருமான வரிக் கணக்குகளுக்கான அலுவலக இரசீது நம் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும். அப்படிப்பட்ட நன்கொடைகளுக்கான பணவிடைத்தாள்களை (Demand Drafts) “Echo of His Call Educational Trust” என்ற பெயருக்கு எடுத்து அனுப்பும்போது **ஆதார் மற்றும் பான் (PAN) நம்பர்களை தெரியப்படுத்தி வருமானவரி விலக்கு பெறுங்கள்.** மேலும் விபரம் வேண்டுவோர் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| **Account Name** | **: ECHO OF HIS CALL EDUCATIONAL TRUST** |
| **Account Number** | **: 1023 2923 805** |
| **Bank Name** | **: STATE BANK OF INDIA** |
| **Branch** | **: TRIPLICANE, CHENNAI - 600 005** |
| **IFSC Code** | **: SBIN 0000249** |
| **SWIFT Code** | **: SBI NIN BB 455** |

## நமது தலைமையக ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்!

1. ஜெப உதவி – 24 மணி நேரம்
2. அழைப்பின் எதிரொலி – பத்திரிகைகள் (16 மொழிகள்)
   தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, இந்தி, கன்னடம், மராத்தி, பெங்காளி, குஜராத்தி, ஒடியா, நேப்பாளி, அஸாமி, பஞ்சாபி, உருது, சிங்களம், ஆப்ரிகான்ஸ்.
3. வேதாகமக் கடித முறைக் கல்வி – தமிழ், ஆங்கிலம், இந்தி
4. அஞ்சல் வழி இறையியல் கல்வி (தமிழ் மற்றும் ஆங்கிலம்)
5. நெகேமியா வேதாகமக் கல்லூரிகள் – (சேப்பாக்கம், வேளச்சேரி & சந்தோஷபுரம்)
6. பிரதானக் கட்டளைப் பங்காளர்கள் (ஊழியர் ஐக்கியம்)
7. பயிற்சி வகுப்புகள் – கருத்தரங்குகள்
8. சுவிசேஷக் கூட்டங்கள்
9. கைப்பிரதி வினியோகம் – தொடர் ஊழியம்
10. சுவிசேஷ அச்சகம் – சுவிசேஷ பிரசுரங்கள்
11. St. பால்ஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி – கிராம ஆங்கிலப் பள்ளி
12. சிறுவர் வேத பாடசாலை (சேப்பாக்கம்) – ஞாயிறு காலை 10.30 மணி
    & (வேளச்சேரி, பாலாஜி நகர் & சந்தோஷபுரம்) மாலை 3.00 மணி
13. அதிகாலை ஆராதனை – ஞாயிறு காலை 5.30 மணி
14. ஆயத்தக் கூட்டம் – ஞாயிறு காலை 8.00 மணி
15. தமிழ் ஆரதனைகள் – ஞாயிறு காலை 8.30 மணி
16. வாலிபர் கூட்டம் – ஞாயிறு காலை 11.00 மணி
17. ஐக்கிய உணவு – ஞாயிறு மதியம் 1.00 மணி
18. இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 4.00 மணி
19. தெலுங்கு ஆராதனை – ஞாயிறு மாலை 5.00 மணி
20. ஆங்கிலம் – இந்தி ஆராதனை – ஞாயிறு மாலை 6.00 மணி
21. கருத்து நேரம் – ஞாயிறு இரவு 7.00 மணி
22. பெண்கள் ஆராதனை – புதன் மாலை 5.30 மணி
23. ஆண்கள் ஆராதனை – வெள்ளி இரவு 7.00 மணி
24. சீஷத்துவக் கூட்டம் – சனி மாலை 6.00 மணி
25. வீட்டுக் கூட்டங்கள் – செவ்வாய், வியாழன் மாலை 6.30 மணி
26. விசேஷ திருவிருந்து – பிரதி மாதம் முதல் நாள் காலை 6.00 மணி
27. ஊழியர்கள் கூடுகை – முதல் சனிக்கிழமை மாலை 6.00 மணி
28. பெற்றோர் ஜெபம் – முதல் ஞாயிறு மாலை 4.00 மணி
29. இரவு ஜெபம் – 3–ம் வெள்ளி இரவு 9.30 மணி
30. உபவாச ஜெபம் – இரண்டாம் சனிக்கிழமை காலை 9.30 மணி
31. திருவிருந்து – 2–ம் ஞாயிறு ஆராதனைகள்
32. வாலிபர் / சிறுவருக்கான ஜெபம் – தினமும் இரவு 10.00 மணி (தொலைபேசி மூலம்)
33. பணியாளர் ஜெபம் – தினமும் காலை 9.00 மணி
34. அலுவலகம் – தினமும் காலை 9.00 முதல் இரவு 9.00 வரை (ஞாயிறு தவிர)

## அழைப்பின் எதிரொலி தபால் வழிக் கல்வி

### இந்திய மாணாக்கர்களுக்கு

### I. வேதாகமத் தபால் கல்வி

தபால் மூலம் வேதத்தின் உண்மைகளையும், தமிழ், ஆங்கிலம், இந்தி மொழிகளில் கற்க ஓர் அரிய வாய்ப்பு. வயது வரம்பு இல்லை. கல்வித் தகுதி தேவையில்லை. கட்டாயக் கட்டணம் எதுவும் இல்லை.



“புதுவாழ்வு – உமக்கு” என்ற நல்ல புத்தகத்தையும் பெற்றுக் கொள்ளலாம். இப்புத்தகம் ஆங்கிலம் – 54 பக்கங்கள், இந்தி – 76 பக்கங்கள், தமிழ் – 96 பக்கங்கள் கொண்டது. சான்றிதழ் வழங்கப்படும்.

– ஆசிரியர்

### II. அஞ்சல் வழி இறையியல் கல்வி




ஆழமான ஆவிக்குரிய சத்தியங்களை 149 தொகுப்புகள், ஆங்கிலம் – 537 பக்கங்கள் மற்றும் தமிழ் – 652 பக்கங்கள் கொண்ட 7 புத்தக வடிவில் பெற்று முழுவதும் படித்த பின்னர் ஊழிய சான்றிதழ் பெறமுடியும். இதற்கு மொத்த கட்டணம்

**ரூ.1000/– மட்டுமே.**

மேலும் விவரங்களுக்கு :



**தலைவர், நெகேமியா வேதாகமக் கல்லூரி**
10, முகமது அப்துல்லா 2-வது தெரு, சேப்பாக்கம், சென்னை - 600 005.
தொலைபேசி: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766
கைபேசி: (+91) 98410 71852, 95661 31858
மின்அஞ்சல்: biblecor@yahoo.co.in

## அழைப்பின்எதிரொலி பத்திரிகையை

### இலவசமாய்ப் பெற்றிட ஓர் நல்ல வாய்ப்பு

உங்கள் / உறவினர் / நண்பர்கள் முகவரி மற்றும் கைபேசி எண்ணை தபால் / கடிதம் / வாட்ஸ் அப் மூலமாக தெளிவாக **அழைப்பின் எதிரொலி** அலுவலகத்திற்கோ, அலுவலக செல்போனுக்கோ அனுப்பினால் உங்களுக்கு / உறவினர்களுக்கு / நண்பர்களுக்கு இலவசமாக **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை அனுப்பி வைக்கப்படும். தேவனுக்கான இச்சேவை முற்றிலும் இலவசமானது! தேவனின் அருளை பெற வாரீர்!!



ஆழக்குழியிலிருந்து அரண்மனைக்கு!

# PIT TO PALACE

(போதகர் எஸ். சாம் செல்வ ராஜ் அவர்களின் வாழ்க்கை அனுபவங்கள்)

வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன் (மத்தேயு 24:15)

## அதிசய தேவனின் கரத்தில் அற்புத ஊழியர்கள்!

எனது ஊழியத்தின் ஆரம்ப நாட்களிலிருந்தே தேவ மகிமைக்காகவும், அவரது ராஜ்யத்தின் விரிவாக்கத்திற்காகவும் எந்த வேலையையும் துணிந்து எடுக்கவும், எந்த சவாலையும் சந்திக்கவும்கூட திட மனதையும் தேவன் எனக்கு அருளியிருந்தார். எந்த பிரதிபலனையும் உடனேயே எதிர்பார்த்து நான் செயல்படவில்லை. 1976ஆம் ஆண்டிலிருந்து 1986 வரை, நான் அரசாங்க பணியில் இருக்கும்பொழுது, விடுப்பு எடுத்துக் கொண்டு, எனது சொந்தச் செலவில் சுவிசேஷ சுற்றுப் பயணங்களை, இந்தியாவின் பல பகுதிகளில் சிறிய அளவிலான சுவிசேஷக்கூடடங்கள் போன்றவற்றை ஒழுங்கு செய்து நடத்தி வந்தேன்.

ஓரிரு மாதங்கள் வரைக்கும் எனது ஆவிக்குரிய நண்பர்களோடு இந்தியாவின் பல பகுதிகளுக்கும் சென்று இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் சொல்லப்படாத இடங்களில் சென்று அநேக ஆயிரக்கணக்கான மக்களை இயேசுவிடம் வழிநடத்த தேவன் உதவி செய்தார். எல்லாருடைய ரயில் டிக்கட்டுக்களுக்காகவும், பேருந்து டிக்கட்டுக்களுக்காகவும், தங்கும் செலவுகளுக்காகவும் தேவனையே நோக்கிப் பார்க்க வேண்டியதாயிருந்தது. தேவனும் அற்புதவிதமாக எனக்கு உதவி செய்தார்.

இந்த ஊழியங்களின் மூலமாக செங்கல்பட்டு மாவட்டம், விழுப்புரம் மாவட்டம், மதுரை மாவட்டம், திருச்சி மாவட்டம், கன்னியாகுமரி மாவட்டம், கொடைக்கானல், ஊட்டி, திருவனந்தபுரம், பீளமேடு, இடுக்கி, வண்டிபெரியார், விஜயவாடா, பங்களூர், மைசூர் போன்ற மாவட்டங்களின் குக்கிராமங்களுக்குச் செல்ல தேவன் கிருபை செய்தார்.

அவ்வாறு பல இடங்களுக்குச் செல்லும்போது எங்களது வாத்தியக்கருவிகள், சுவிசேஷக் கைப்பிரதிகள் போன்றவைகளை பேருந்துகள், ரயில்கள் போன்றவற்றில் ஏற்றிச் செல்லும்போது பலவித சரீர கஷ்டங்களை அனுபவித்திருக்கிறேன். என்னுடைய பொருளாதார நிலைமையின் காரணமாக ஊழியத்திற்கென்று ஒரு வாகனம் வாங்க என்னால் நினைத்துக்கூட பார்க்க முடியவில்லை. ஆனால், கர்த்தர் எனது மனநிலையையும், என்னைக் குறித்த சாட்சிகளையும் அறிந்திருந்தார். **... உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ் செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே.** எபிரெயர் 6:10.

பிற்காலங்களில் என்னோடு ஊழியம் செய்த அநேகரை தேவன் ஆசீர்வதித்து அவரது தோட்டத்தில் வல்லமையாக உபயோகிப்பதை நான் அறிந்து கொண்டேன். என்னையும் தேவன் ஆசீர்வதித்து, இக்காலத்துக்கு ஏற்ற நவீன உபகரணங்களையும், கார், வேன், வைராக்கியமுள்ள சக ஊழியர்களையும் கொடுத்துள்ளார். அதனால் இரட்சிக்கப்படாத அநேக மக்களுக்கு சுவிசேஷம் சொல்ல தேவன் உதவி செய்கிறார். என்னை பல தேசங்களுக்கும் கொண்டு சென்று அநேக ஆவிக்குரிய நண்பர்களையும் பல தேசங்களில் தந்திருக்கிறார்.

அந்த தேவன் இன்றும் உயிரோடு இருக்கிறார். எந்தவித உடனடி பிரதிபலன்களையும், உயர்ந்த பதவிகளையும், எதிர்பார்க்காதே, தீய குறிக்கோள் இல்லாத மக்களை அவர் தேடிக் கொண்டிருக்கிறார். **உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்.** பிரசங்கி 11:1. அவர் ஒருவனுக்கும் கடனாளியல்ல.

தேவனது ராஜ்யத்திற்காக எதையாகிலும் செய்ய வேண்டுமென்று நினைத்தால் அதை உடனடியாகச் செய்ய வேண்டும் என்று கற்றுக் கொண்டுள்ளேன். சூழ்நிலைகளைக் கவனிக்கக் கூடாது. **காற்றைக் கவனிக்கிறவன் விதைக்க மாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்க மாட்டான்.** பிரசங்கி 11:4. உலகமும் உலக மக்களும்கூட உங்களுக்கு உதவி செய்ய வருவார்கள்.

இக்காலத்தில், மக்கள் தங்களுடைய சுகத்தையோ, பணத்தையே, தாலந்துகளையோ, தேவராஜ்யத்தின் முதலீடாக வைக்க முன்வர தயங்குகின்றனர். ஆனால், உடனடியாக பெரிய உயர்வுகளை மட்டும் எதிர்பார்க்கின்றனர். அன்பு நண்பரே, இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் நான் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறேன். உங்களையும் அவர் ஆசீர்வதிக்க முடியும். இயேசு கிறிஸ்துவுக்காக எதையாகிலும் செய்ய முன் வருவீர்களா ? உங்களது சிலுவையை எடுத்துக் கொண்டு அவரைப் பின்பற்றி செல்ல ஆயத்தமா ? எப்படியாகிலும், எவ்வளவு செலவு செய்தாகிலும் இயேசு கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்தைச் சுமந்து செல்லும் மக்களை தேவன் தேடிக் கொண்டிருக்கிறார். (1 கொரிந்தியர் 9:22).

**இவ்வார்த்தைகளை வாசிக்கும் நீங்கள், கர்த்தர் உங்களுக்காக ஒரு திட்டம் வைத்திருக்கிறார் என்று அறிய வேண்டும். இவ்வுலகத்தின் பணம், ஆரோக்கியம், உறவுகள், செல்வாக்கு, புகழ் ஆகியவைகள் ஒரு நாளில் உங்களை ஏமாற்றும். ஆனால் *இயேசு உங்களைத் திக்கற்றவர்களாக விட மாட்டார்.*** (யோவான் 14:18). **இன்றே ஒரு தீர்மானம் எடுங்கள். ஒரு மிகப் பெரிய பிரதிபலன் உங்களுக்காகக் காத்திருக்கிறது.**

************

... 6-ம் பக்கத் தொடர்ச்சி

20) அவர் ஆகாரைக் கொண்டு சென்று, பின்னர் அவளையும், அவர்களின் மகனையும் கைவிட்டார். ஆனாலும், தேவன் தனது வார்த்தைக்கு உண்மையுள்ளவராக இருந்தார். நீங்கள் யாராக இருந்தாலும் சரி, தேவன் உண்மையுள்ளவராக இருப்பார்!

## (ஆ) மோசே!

அவர் தன்னம்பிக்கையையும், இலட்சியத்தையும் இழந்தபோது, தேவன் மோசேயை அழைத்தார். **அவர் தன்னை ஒரு தலைமைத்துவத்திற்குத் தகுதியானவராக நினைக்கவில்லை. ஒரு மேய்ப்பனாக வாழ்க்கையில் திருப்தி அடைந்த மோசே, முட்செடியில் உண்டான அக்னி ஜுவாலையின் நடுவே ஆண்டவரைச் சந்தித்து, அடுத்தடுத்து சாக்குப்போக்குகளைக் கூறினார்.** (யாத்திராகமம் 3&4).

நம்மில் எத்தனை பேர் இதையே செய்கிறோம். நம் வாழ்க்கைக்கான ஆண்டவரின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குப் பதிலாக சாக்குப்போக்குகளை சொல்லுகிறோம்.

மோசேயின் சுய கருத்துணர்விற்கும், தேவனைப் பற்றிய புரிதலுக்கும் இடையிலான கூர்மையான வேறுபாட்டைக் கவனியுங்கள்:

யாத்திராகமம் 3:11 : **... பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்து வரவும், நான் எம்மாத்திரம்? ...**

யாத்திராகமம் 4:1 : **அவர்கள் என்னை நம்பார்கள்; என் வாக்குக்குச் செவிகொடார்கள்; கர்த்தர் உனக்குத் தரிசனமாகவில்லை என்று சொல்லுவார்கள்...**

யாத்திராகமம் 4:10: ... **ஆண்டவரே, இதற்கு முன்னாவது, தேவரீர், உமது அடியேனோடே பேசினதற்குப் பின்னாவது நான் வாக்கு வல்லவன் அல்ல; நான் திக்குவாயும் மந்த நாவும் உள்ளவன்**...

யாத்திராகமம் 4:13 : ... **ஆண்டவரே, நீர் அனுப்பச் சித்தமாயிருக்கிற யாரையாகிலும் அனுப்பும் ...**

இது தயக்கம், பாதுகாப்பின்மை மற்றும் தகுதியற்றவன் என்ற மோசேயின் சுயகருத்தைப் பிரதிபலிக்கிறது.

ஆனால் இப்போது தேவனுடைய கண்ணோட்டத்தைக் கவனியுங்கள்.

யாத்திராகமம் 3:10 : **நீ இஸ்ரவேல் புத்திரராகிய என் ஜனத்தை எகிப்திலிருந்து அழைத்து வரும்படி உன்னைப் பார்வோனிடத்துக்கு அனுப்புவேன். வா**...

தேவன் மோசேயை தனது மக்களிடம் மீட்பர், தலைவர், பாதுகாவலர் மற்றும் மீட்பர் என்று பார்த்தார். மோசே தன்னை சந்தேகித்தாலும், தேவன் அவரிடம் ஒரு தெய்வீக பணியை ஒப்படைத்தார். ஒருவேளை, நீங்கள் இதைப் படிக்கும்போது, தேவன் உங்கள் சொந்த வரம்புக்குட்பட்ட சுயகருத்துகளில் சிலவற்றை எதிர்கொள்கிறார். தேவனுடைய கண்ணோட்டத்தின் மூலம் உங்களைப் பார்க்கத் தொடங்க வேண்டிய நேரம் இது.

அவரை மட்டுப்படுத்தாதீர்கள். தேவன் மோசேயை அழைத்தபோது அவருக்கு 80 வயது. தேவனுடைய நேரம் மனித எதிர்ப்பார்ப்புகளுடன் அரிதாகவே ஒத்துப்போகிறது. மோசே உணர்ந்த பெலவீனங்கள் தேவனுடைய வல்லமை வெளிப்படும் தளமாக மாறியது. எல்லாவற்றையும் அவருடைய பாதத்தில் அர்ப்பணித்து சரணடைதல்தான் திறவுகோலாகும்.

## (இ) தாவீது!



**தேவன் தாவீதின் இருதயத்தைப் பார்த்து தெரிந்து கொண்டார்.**

தாவீது ஒரு குறிப்பிடத்தக்க குடும்பத்தைச் சேர்ந்தவர் அல்ல. அவருக்கு மதிப்புமிக்க பின்னணி இல்லை. அவருடைய சொந்த குடும்பத்தினராலும்கூட அவர் கவனிக்கப்படவில்லை அபிஷேகம் செய்யப்பட்ட போதிலும், அவர் கவனிக்கப்படாத எல்லோராலும் மறக்கப்பட்ட ஒரு இளைய மகன், ஆனாலும் அவர் இஸ்ரவேலின் மிகப்பெரிய ராஜாவானார்.

**தேவன் தாவீதை, அவரது தோற்றம் அல்லது அந்தஸ்துக்காகத் தெரிந்தெடுக்கவில்லை. தாவீதின் இருதயத்தைப் பார்த்து தெரிந்து கொண்டார்.** (1சாமுவேல் 16:7).

தாவீது பாவத்தில் வீழ்ந்தபோதும், தேவன் தாவீதின் பிள்ளையை எடுத்துக் கொண்டு அவரைச் சிட்சித்த போதிலும், தாவீது மனந்திரும்பியபோது அவர் மீது இரக்கம் காட்டி தமது உண்மையை வெளிப்படுத்தினார். தேவன் தனது அன்பைத் திரும்பப் பெறவில்லை. அவர் தாவீதைத் தெரிந்தெடுத்தார்.

## (ஈ) சீஷர்கள்!

பன்னிரு சீஷர்களும் மாறுபட்ட மற்றும் கவனம் பெறாத அதாவது, வரி வசூலிப்பவர் மத்தேயு; ஒரு வைராக்கியவாதி சீமோன்; பல படிக்காத மீனவர்கள். இவர்கள் சாதாரண மனிதர்கள், குறைபாடுள்ளவர்கள் மற்றும் பெரும்பாலும் தோல்வியுற்றவர்கள் போன்ற பின்னணியிலிருந்து வந்தவர்கள் என்று சுவிசேஷங்கள் காட்டுகின்றன.

ஆனால், இயேசு கிறிஸ்து ஒருபோதும் தனது அழைப்பைத் திரும்பப் பெறவில்லை. நடபடிகள் புத்தகத்தில், பெந்தெகொஸ்தேக்குப் பிறகு அனுதினமும் மக்கள் மூலம் தேவனுடைய வல்லமையை வெளிப்பட்ட ஒரு தீவிரமான மாற்றத்தைக் காண்கிறோம்.

அன்புள்ள நண்பர்களே!

நாம் நமது தகுதிகளால் தெரிந்தெடுக்கப்படவில்லை. ஆனால், தேவனுடைய ஏகாதிபத்தியத்தாலும், தவறாத அன்பாலும் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளோம். அவரது தெரிவுகள் மனித மரபுகளையும் மீறுகின்றன.

அவர் தனது பலத்தை வெளிப்படுத்த பலவீனமானவர்களைத் தெரிந்து கொண்டார். ஞானிகளை வெட்கப்படுத்த பைத்தியமானவர்களைப் பயன்படுத்துகிறார். இன்னும் இல்லாதவைகளை இருக்கிறவைகளாக அழைக்கிறார். நாம் கேட்கவோ அல்லது கற்பனை செய்யவோ முடியாததைவிட அதிகமாக அவரால் செய்ய இயலும்.

அதுதான் நமது தேவனுடைய வல்லமை!

அவர் எவரையும் தனது மகிமைக்காகப் பயன்படுத்தலாம். அவரது தெரிவுகள் குறிப்பிடப்பட்ட நோக்கத்துடனேயே செய்யப்பட்டவை!

நீங்கள் ஆண்டவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதுவும் ஒரு தெய்வீக நோக்கத்துடன் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள். அவர் நம்மில் கனிகொடுக்கும் வாழ்க்கையைக் காண விரும்புகிறார்.

கனி கொடுக்கும் வாழ்க்கையை நாம் வாழ தேவன் நம் ஒவ்வொருவரையும் பெலப்படுத்துவாராக என்று நான் ஜெபிக்கிறேன். ஏனெனில் அவர் மீண்டும் வரும்போது, அவர் நம்மில் கனியைத் தேடுவார்.

************


உடனடி தேவை சேப்பாக்கம் கிறிஸ்தவ அலுவலகத்திற்கு

1. டிரைவர்கள் (தங்கி வேலை செய்ய)

2. கம்ப்யூட்டர் பணியாளர்கள்

3. பிரிண்டிங் பிரஸ் ஆப்ரேட்டர்கள்

தொடர்புக்கு: (+91) 98412 71858, E.mail: sam@echoofhiscall.org

Posted at "Egmore RMS Patrika Channel" RNI NO. 67380/93. Postal Regn. No. TN/CH/(C)/197/24-26 WPP NO. TN/PMG(CCR)/WPP-158/24-26

## அழைப்பின் எதிரொலி

**YouTube (யூடியூப்)**

உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது நமது அழைப்பின் எதிரொலி (ECHO OF HIS CALL) யூடியூப் (YouTube) சேனலைப் பார்த்து Subscribe செய்ய வேண்டுகிறோம். நன்றி!

– ஆசிரியர்

## OUR BANK DETAILS:

***1. Bank : State Bank of India***

Branch : **Triplicane, Chennai-5**
Name : **S. Sam Selva Raj**
A/C No. : **1023 2934 679**
IFSC : **SBIN 00 00 249**
SWIFT CODE : **SBI NIN BB 455**

***2. Bank : ICICI Bank***

Branch : **Anna Salai, Chennai-6**
Name : **Echo of His Call**
A/C No. : **6038 0502 2319**
IFSC : **ICIC 000 6038**

***3. Bank : State Bank of India***

**(This Account is for Tax Exemption for Indians only )**

Branch : **Triplicane, Chennai-5**
Name : **Echo of His Call Educational Trust**
A/C No. : **1023 2923 805**
IFSC : **SBIN 00 00 249**

**Google Pay: 98410 71858**
**PayPal : SAM SELVA RAJ**
*****
**E.mail : sam@echoofhiscall.org**

## அழைப்பின் எதிரொலி ஊழியங்கள்

**மாதப் பத்திரிகை 16 மொழிகளில், வேதாகமக் கல்லூரிகள், தபால் வழிக் கல்விகள், சபைகளை ஸ்தாபித்தல், கிராம ஆங்கில உயர்நிலைப் பள்ளி, சுவிசேஷ அச்சகம், சுவிசேஷம், கருத்தாய்வுகள், சமூக சேவைகள் மற்றும் ஏனைய செயல்பாடுகள்**

**❋ வருட சந்தா ரூ. 100/– ❋ ஆயுள் சந்தா ரூ. 2000/–**

☞ **அழைப்பின் எதிரொலி** ஊழியத்தின் பல்வேறு ஊழியங்கள், நமது பங்காளர்களால் அளிக்கப்படும் சுயவிருப்பக் காணிக்கை மற்றும் நன்கொடைகளினால் நடைபெற்று வருகின்றன. தேவன் உங்கள் உள்ளத்தில் அளித்த விருப்பத்தின்படி நமது ஊழியங்களைத் தாங்கும்படி கேட்டுக்கொள்கிறோம். சுவிசேஷம் சென்றடையாத இடங்களில் சுவிசேஷத்தினை கொண்டு சேர்த்திட மற்றும் சபைகள் ஸ்தாபிக்கப்பட உங்கள் உதவி எங்களுக்கு தேவை.

☞ உங்கள் விலாசம் அல்லது மின்னஞ்சல் மாறினால், உங்கள் பழைய விலாசத்தையும் புதிய விலாசத்தையும், புதிய மின்னஞ்சலையும், உங்கள் பதிவு எண்ணையும் உடனே எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள். **அழைப்பின் எதிரொலி** பத்திரிகை உங்களுக்குத் தவறாமல் கிடைக்க வேண்டுமானால் எங்களுக்குக் கடிதம் எழுதுங்கள்.

☞ நம் **அழைப்பின் எதிரொலி** பத்திரிகைகள் 16 மொழிகளிலும் நமது இணையதளங்களில் (Websites) வெளியாகின்றன. அவற்றிலிருந்து படித்தும், பதிவிறக்கம் செய்தும் பயன்பெறுங்கள்.

☞ உங்கள் கடிதங்கள், ஜெப விண்ணப்பங்கள், காணிக்கைகள் முதலியவற்றை காசோலை (Cheque), மணிஆர்டர் (M.O.) அல்லது டிமாண்ட் டிராப்ட் (D.D.) **NEFT, PayPal (Sam Selva Raj, sam@echoofhiscall.org) PhonePe (98410 71858), Gpay (98410 71858), Western Union, MoneyGram, etc.** மூலம் **Echo of His Call** என்ற பெயரில் கீழ்க்காணும் விலாசத்திற்கு அனுப்புங்கள். Online மூலமாகவும் அனுப்பலாம்.

☞ உங்கள் E.mail முகவரி மற்றும் செல்போன் / தொலைபேசி எண்களை எங்களுக்கு அனுப்புங்கள். தேவைப்படும்போது **அழைப்பின் எதிரொலி** பத்திரிகையை E.mail மூலம் அனுப்ப உதவியாக இருக்கும்.

**சகோதர, சகோதரிகளே எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்.** 1 தெசலோனிக்கேயர் 5:25.

**அழைப்பின் எதிரொலி,**
**10, முகமது அப்துல்லா 2–வது தெரு, சேப்பாக்கம், சென்னை – 600 005.**
தொலைபேசி : (+91 – 44) 2852 8282, 2852 9293, 2854 7766 செல்: (+91) 98410 71852, 95661 31858
**E.mails : sam@echoofhiscall.org / biblecor@yahoo.co.in**
**Websites : www.echoofhiscall.org / www.stpaulsmatriculation.com**

**YOU CAN SEND YOUR DONATION ONLINE ALSO**

**Regd. with the RNI under No. 67380/93**
**Licenced to post without pre-payment**
**Postal Regn. No. TN/CH/(C)/197/24-26**
**Licence No. WPP - TN/PMG(CCR)/WPP-158/2024-26**
**Date of Publication: last week of previous month**
**Date of Posting : 27th & 28th of previous month**
**Posted at "Egmore RMS Patrika Channel"**
**on 28th JUNE 2025**
**If un-delivered please return to:**
**ECHO OF HIS CALL (TAMIL)**
**P.O. Box No. 2957, Chepauk, Chennai - 600 005, INDIA.**
**Phone: (+91-44) 2852 8282, 2852 9293, 2854 7766**

***JESUS LOVES YOU!***

**To**

*GOD BLESS YOU!*

Owned and published by **S. Sam Selva Raj** from New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005 and printed by **S. Sam Selva Raj** at **Echo of His Call Printers,** New No. 8 & 10, Old No.18 & 19, Mohammed Abdullah 2nd Street, Chepauk, Chennai-600 005. Editor: **S. Sam Selva Raj.**